Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 264/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தங்கராஜ் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | காவல் உதவி ஆய்வாளர் |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 16th May 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 23.11.2017 ம் தேதி 17.30 மணிக்கு பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பொள்ளாச்சி ஜமீன்ஊத்துக்குளி தருமாபுரம் புதுக்காலனியை சேர்ந்த சின்னமாசாணி மகன் பழனிசாமி என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று புகாரின் தன்மையை அறிந்து, நிலையக்குற்ற எண்.236/2017 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் வழக்கு பதிவு செய்து, அச்சு முதல் தகவல் அறிக்கையினையும், வாதியின் புகாரினையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 ற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே மாலை 18.30 மணிக்கு சம்பவயிடமான தருமாபுரம் பேருந்து நிறுத்தம் அருகே சாட்சிகள் பாலசுப்பிரமணியம், சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

பின்னர் சம்பவயிட சாட்சிகளான பழனிச்சாமி, கருப்புசாமி, பட்டீஸ்வரன், சின்னான், கார்த்திகேயன், சக்திவேல், பாலசுப்பிரமணியம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.11.2017 ம் தேதி அதிகாலை 00.15 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட நாகராஜ் என்பவர் கோவை சிஎம்சிஎச் மருத்துவமனையில் இறந்துவிட்டதாக அதிகாலை 02.15 மணிக்கு கிடைத்த தகவலினை பெற்று, காலை 06.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதச விலிருந்து 279, 304A இதச வாக மாற்றம் செய்து, சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

காவல் ஆய்வாளர் அயல் பணியில் இருந்ததால் அவரது உத்தரவுப்படி சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் நிலைய பொறுப்பில் இருந்த நான் இவ்வழக்கினை உத்தரவுப்படி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கோவை சிஎம்சிஎச் மருத்துவமனைக்கு சென்று காலை 09.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன நாகராஜின் பிரேதத்தினை பஞ்சாயத்தார் முன்னிலையில் சாட்சிகளை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன்.

பின்னர் சாட்சிகள் சுமதி, பழனிச்சாமி, ஈஸ்வரன், வெத்ஈஸ்வரன், இராமன், நாகராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோன நாகராஜின் பிரேத்தினை இறப்பின் காரணம் அறிய 12.10 மணிக்கு கோவை சிஎம்சிஎச் மருத்துவமனையின் பேராசியிரிடம் ஒப்படைக்க தலைமை காவலர் 2092 சசிக்குமார் என்பவருக்கு தக்க அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தேன்.

இவ்வழக்கில் இத்துடன் எனது முதற்கட்ட புலன் விசாரணையினை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் வழக்கு கோப்புகளை ஒப்படைத்தேன். காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**, சட்ட மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5**, பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சிகளை எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சாட்சி பழனிச்சாமியை மருத்துவமனையில் விசாரித்தேன், மற்ற கண்ணுற்ற சாட்சிகளை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன்.

சம்பவ நடந்த சாலை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை என்றாலும், மக்கள் அதிகம் நடமாடும் சாலை என்றாலும் சரியல்ல, வாகனங்கள் அதிகமாக செல்லும் சாலையாகும். சம்பவயிடத்திற்கு அருகில் தர்மகவுண்டர் தோப்பு, ஜெயாகாயர்ஸ் மில் ஆகியவை உள்ளது என்றால் சரிதான்.

சம்பவயிடத்திற்கு அருகில் இறந்தபோன நபர் வேலை செய்யும் கார்த்திக் கவுண்டர் மில் உள்ளது என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் இறந்துபோன நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் பேருந்து நிறுத்தமோ, கடைகளோ இல்லை என்றால் சரிதான்.

சம்பவயிடத்திற்கு அருகில் இருந்தவர்களை சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் யாரும் இல்லை, அதனால் விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், அவர்களை போலியாக இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக சேர்த்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

கார்த்திக்கவுண்டர் என்பவர் தான் தகவல் கூறி இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக இருந்தவர்களை சம்பவயிடத்திற்கு வரவழைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி கார்த்திக் என்பவரை விசாரணை செய்தால் உண்மை நிலை தெரியவரும் என்ற காரணத்தினால் அவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

சம்பவம் நடக்கும் சமயம் எந்த திசையினை நோக்கி வாகனம் வந்ததாக எனது விசாரணையில் தெரியவந்தது என்றால் கிழக்கு நோக்கி ஆகும். சம்பவயிடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது வலப்புறமாக இறந்துபோனவர் வேலை செய்த மில் உள்ளது என்றால் சரியல்ல.

மாதிரி வரைபடத்தில் சம்பவயிடத்தில் கார்த்திக்கவுண்டர் மில் எந்த திசையில் காட்டப்பட்டுள்ளது என்றால் தென்கிழக்கில் உள்ளது. ரோட்டின் வலது புறத்தில் கார்த்திக்கவுண்டர் மில் உள்ளது. மேற்கிலிருந்து கிழக்காக வரும்பொழுது வலதுபுறம் திடீரென திரும்பியதால் தான் விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் இறந்துவிட்டார் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக புகாரினை பெற்று சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர், வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** -இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru.E.Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.